# பாராளுமன்ற புலமைப்பரிசில்கள் சபை- 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாராளுமன்ற புலமைப்பரிசில் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும காட்டும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 2002 இன் 22 ஆம் இலக்க பாராளுமன்ற புலமைப்பரிசில் அதிகாரச்சட்டம் | |
| (i) 3 ஆவது பிரிவு | ஆய்வுகள், ஆராய்ச்சிகள், ஆலோசனை சேவை மற்றும் ஏனைய கல்வி நடவடிக்கைகளுக்காக நிதி வழங்கியும் இலங்கை பிரஜைகள் வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் வகையிலும் வெளிநாட்டு பிரஜைகள் இலங்கையிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களில் கல்வியினைத் |

| | | |
|---|---|---|
| | | தொடர்வதற்கும் ஏற்பாடுகளை வழங்கி மீளாய்வாண்டின் போது கல்வியின் செயல்முன்னேற்றத்தினை நோக்கி சர்வதேச பங்கு பற்றுதலினை மேம்படுத்துதலே குறிக்கோளாக இருந்த போதிலும் அக் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 5 ஆவது பிரிவு | அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்புச் சபை கலைக்கப்பட்டுள்ளது. ஆகவே சபாநாயகரினால் அதிகாரச் சட்டத்தின் 5 ஆவது பிரிவினைத் திருத்துமாறு சபை முதல்வருக்குத் தெரியப்படுத்தியிருந்தும் அத்திருத்தத்தினை மேற்கொள் ளாமையின் காரணமாக கட்டுப்பாட்டுச் சபையினை நியமிப்பதற்கு முடியாத நிலைமை உருவாகி இருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையின் ii ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற 04 உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 1,019,657 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகள் ரூபா 702,293 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,026,711 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 324,418

தொகையான குறைவு காணப்பட்டது. நிலையான வைப்பு வட்டி ரூபா 324,418 இனால் குறைவடைந்தமையும் ஊதியம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் ரூபா 113,480 இனால் அதிகரித்தமையும் நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2003 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாராளுமன்ற புலமைப்பரிசில் சபையினால் 2007 ஆம் ஆண்டின் இறுதி வரை 03 புலமைப்பரிசில்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த 03 புலமைப்பரிசில்களுக்காக 2003 நவம்பர் மாதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 16,238,162 செலவு செய்யப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை எதுவித புலமைப்பரிசிலும் வழங்கப்படாதிருந்ததுடன் சபையினைப் பராமரிப்பதற்கான நிர்வாகச் செலவுகளாக இக்காலப் பகுதிக்காக முறையே ரூபா 3,384,321 ரூபா 3,604,850, ரூபா 3,800,776 மற்றும் ரூபா 3,830,947 தொகைகள் செலவு செய்யப்பட்டிருந்தன.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2004 பெப்ரவரி 20 ஆந் திகதி 02 நிறைவேற்று மேசைகளும் 10 நிறைவேற்று கதிரைகளும் ரூபா 48,620 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இப்பொருட்கள் பாராளுமன்றக் குழு மண்டப இலக்கம் 02 இல் 05 ஆண்டுகள் காலமாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பொருட்களை சபையின் பாவனைக்கு எடுத்துக்கொள்ளாது 2008 திசெம்பர் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிதன்மையும் சிறந்த கட்டுப்பாடும்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் செயலாற்றல் அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ‘‘பாராளுமன்ற புலமைப்பரிசில் சபைக்கு கட்டுப்பாட்டுச் சபை நியமிக்கப்படாதிருந்ததனால் அந்த அறிக்கைகளைத் தயாரிக்கமுடியாதுள்ளது’’ என உதவிச் செயலாளர் தெரியப்படுத்தியிருந்தார்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் செயலாளரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பதவியணியினரை நியமித்தல்

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு